<u>பத்திரிகை குறிப்பு</u>

தமிழ்நாடு அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு வளர்ச்சி சட்டம் 2006ன் கீழ் அரசாணை எண்.7, சிறு தொழில் துறை , நாள் 17.07.2007ன் படி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு குறு மற்றும் சிறுதொழில் நிறுவன வசதியாக்க மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் அடிப்படையில் குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, காலதாமதமான பணப்பட்டுவாடாக்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க இந்த தீர்வு மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களிடம் இருந்து **பொருளை வாங்கும் நிறுவனம் உரிய காலத்தில் பணப்பட்டுவாடா செய்யாவிட்டால், அசல் தொகையுடன் ரிசர்வ் வங்கி விதித்துள்ள வட்டியினை போல 3 மடங்கு கூட்டு வட்டியும் சேர்த்து வசூல் செய்ய வழிவகை செய்கிறது.**

31.10.2007 அன்று சென்னையில் நடைபெற்ற முதல் கூட்டத்தில், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, மற்றும் கடலூர் மாவட்டங்களை சேர்ந்த 42 நுண் மற்றும் சிறு தொழில் நிறுனங்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, பணப்பட்டுவாடா செய்யாத நிறுவனங்களிடமிருந்து நிலுவையில் உள்ள ரூ.32.5 கோடிக்கான மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டது. .

16.04.2008அன்று கிண்டியில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, மற்றும் கடலூர் மாவட்டங்களை சேர்ந்த 41 குறு மற்றும் சிறு தொழில் நிறுனங்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மேலும், இந்த வசதியாக்க மன்றத்தின் அடுத்த கூட்டம் **தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப.** அவர்கள் தலைமையில், சென்னை–32, கிண்டியில் அமைந்துள்ள மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான சேவை நிலைய (MSME Development Institute) கூட்ட அரங்கில் **13.08.2008 காலை 10.30 மணியளவில்** கூடி குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு சேரவேண்டிய நிலுவையில் உள்ள தாமதபடுத்தப்பட்ட தொகையினை வசூல் செய்ய ஆணைகள் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் டான்ஸ்டியா உப தலைவர், திரு.சி.கே.மோகன், சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவன தொழில் மற்றும் நிதி மறுசீரமைப்பு கூட்டமைப்பின் தலைவர் திரு.டி.இராமசிருஷ்ணன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் முதன்மை வங்கி முதன்மை மேலாளர் (கடன் வசதி) திரு.A.ரவி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மண்டல மேலாளர், திரு கே. சொக்கலிங்கம் ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்

மேற்படி அரசாணைக்குட்பட்டு, பாக்கி தொகை சேர வேண்டிய குறு, சிறு தொழில் நிறுவனங்கள் தகுந்த ஆதாரங்கள் மற்றும் உறுதி மொழி பத்திரம், வேண்டுகோள் கடிதங்களுடன் மண்டல இணை இயக்குநர், தொழில் வணிகத் துறை, கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை, சென்னை-32 என்ற முகவரியில் உள்ள குறு மற்றும் சிறுதொழில் நிறுவன வசதியாக்க மன்ற அலுவலகத்தில் முறையிடலாம்.

**********